அன்று தினமலர் மதுரைப் பதிப்பில் ரூபாய் 15,000 பெறுமானம் உள்ள பம்ப் செட்டை மூன்றாயிரம் ரூபாய்க்கு விற்பதாக விளம்பரம் வந்திருக்கிறது. அதற்கான விண்ணப்ப பாரம் ரூபாய் 500 கொடுத்து வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அரசினுடைய ஆதரவோடு நடக்கின்றதா? இதைப் பொறுத்தவரையில் மீதிப் பணத்தை வெளிநாட்டு நிறுவனங்கள் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது சரிதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விளம்பரத்தை நானும் பார்த்தேன். இது பற்றி இலாக்காவினிடத்திலே தகவல் கேட்டிருக்கிறேன். அந்த விவரத்தை விரைவில் அவைக்கு அறிவிக்கிறேன்.

(ஆ) மதுரை மாவட்டம் குடகனார்பட்டியில் மின்சாரத்திற்கு கூடுதல் சர்சார்ஜ் விதித்திருப்பது குறித்து.

திரு. வே. இரா. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தைச் சேர்ந்த குடகனார்பட்டி என்ற கிராமத்தில் மின்சார வாரியத்தில் பழைய மின் கட்டண பாக்கிகளை ஒன் ப்ளஸ் ஒன் என்ற வீதத்தில் கட்டியிருக்கிறார்கள். அப்படி பழைய பாக்கியைக் கட்டிவிட்ட அனைத்து விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் அவர்கள் மேற்கொண்டும் கூடுதலாக சர்சார்ஜ் என்று கூறி பல்லாயிரக்கணக்கான ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்லி நோட்டீஸ் விட்டிருக்கிறார்கள். இதை உடனடியாக நிறுத்தி வைக்கின்ற வகையில் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா ? அல்லது வாரியத்திற்கு உடனடியாக அறிவுரை வழங்கி அதை நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முற்படுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதனை எனது கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். சம்பந்தப்பட்ட மதுரை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களை இங்கே வரச் சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே கட்டப்பட்டிருந்தால் மீண்டும் ஏன் கேட்கப்பட்டது என்று கேட்டு, தவறாக இருந்தால் அதை ரத்து செய்யவும், மேற்கொண்டு கட்டவேண்டிய கட்டணத்தை வசூலிக்காமல் இருப்பதற்கும் மின்துறை ஆணை பிறப்பிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு:

(அ). கோவை மாவட்டத்தில் நல்லூர் கிராமத்தில் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க வேண்டியதன் அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. சுப்பராயன், ஆ. நடராசன், ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், நல்லூர் கிராமத்தில் 7 வருடமாக வீடு கட்டிக் குடியிருந்து வரும் 177 ஏழைத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப் படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், நல்லூர் கிராமம் புல எண். 736/1-ஏ-யில் 3.10 ஏக்கர் விஸ்தீரணத்தில் உள்ள அரசு நிலத்தில் 162 நபர்கள் ஓட்டுவில்லைக் கட்டிடங்கள் கட்டிக் கொண்டு வசித்து வருகிறார்கள். அவர்கள் யாவரும் நெசவுத் தொழில் போன்ற பல தொழில்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். மேற்படி நிலம் புஞ்சைத் தரிசு என்று வகைபாடு கொண்டுள்ளது. மேற்படி நிலம் 1961-ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டத்தின் சட்டப் பிரிவு 18(1)-ன் கீழ் அரசினால் கையகப் படுத்தப்பட்ட நிலமாகும். அந்த நிலம் திரு. மாரிமுத்து பண்டாரம் என்பவருக்கு விவசாயத்திற்காக ஒப்படை செய்யப் பட்டது. ஒப்படை விதிகளின்படி மேற்படி நிலத்தில் சாகுபடி செய்யாமல் நிலத்தை வீட்டுமனைகளாக மாற்றி மனை ஒன்றுக்கு ரூ. 1,000 என மாரிமுத்து பண்டாரம் விற்பனை செய்தது தெரியவந்து அவருக்கு செய்த நில ஒப்படை ரத்து செய்யப் பட்டது. ஒப்படை ரத்து செய்ததைத் தெரிந்து கொண்ட பொது மக்கள் சிலர் அந்நிலத்தில் குடிசைகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேற்படி அரசு கையகப்படுத்திய நிலத்தில் வீடுகள் மூலம் ஆக்கிரமிப்பு செய்துள்ளது மிகுந்த ஆட்சேபணைக் குட்பட்டது. மேற் குறிப்பிட்ட நிலம் தமிழ்நாடு நிலச் சீர் திருத்தச் சட்டம் 1961-ன் கீழ் உபரி நிலமாக எடுக்கப்பட்ட படியால் மேற்படி நிலத்தை தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உபரி நில விநியோக) விதிகள் 1965-ன் கீழ் பயன்படுத்துவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.